தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1971 ஜூலை 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக்குறிப்பு.

சோவியத் நாட்டு விண்வெளி வீரர்கள் மூவர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சோவியத் நாட்டின் மூன்று விண்வெளி வீரர்கள், சோயுஸ்-11 என்னும் விண்வெளிக் கப்பலில், தம் கடமையை ஆற்றிவிட்டுப் புவிக்குத் திரும்புகையில், 30—6—1971 அன்று இயற்கை எய்திய துயரமான செய்தியை இப் பேரவைக்கு நான் மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். விண்வெளி ஆராய்ச்சியின் மூலம் நம் அறிவை வளர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டிருந்த இம்மூவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். விண்வெளி வீரர்களின் மறைவால் சோவியத் நாட்டு மக்களுக்கும், அரசுக்கும் ஏற்பட்டுள்ள இழப்பிற்கு, நம் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்களை ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றார்கள்).

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளிவைக்கப்பட்ட வினாக்கள் இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

Kudumiamalai Agricultural Research Station.

* 34. Q.—Thiru S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the details of the Kudumiamalai Agricultural Research Station to be set up in Tiruchirappalli District?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : குடுமியாமலையிலுள்ள அண்ணா பண்ணையில் வேளாண்மையில் பயிர்வள ஆராய்ச்சிக்காக கலைஞர் கருணாநிதி பயிர்வள ஆராய்ச்சி நிலையம் (Kalaignar Karunanidhi Centre for Adaptive Research in Agriculture) என்று அமைக்கப்படும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவுவது குறித்த பணி 6—5—1971 அன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

(1) நிலவளம், நீர்வளம் பற்றி குறிப்பாக அவற்றைக் கையாளுவது பற்றிய நடைமுறை ஆராய்ச்சி.

TRUTH ALONE TRIUMPHS